செய்தி வெளியீடு எண் : 884 நாள் : 11.05.2023

# செய்தி வெளியீடு

## ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம் ரூ.20,000 கோடி முதலீட்டில், தொழிற்சாலை நவீனமயமாக்கல் மற்றும் நவீன வகை கார்கள் உருவாக்குதல், மின்வாகன மின்கலன் தொகுப்பு, மின்வாகன மின்னேற்று நிலையங்கள் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கான வசதிகளை செய்து தருவது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று (11.05.2023) சென்னையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தென் கொரியா நாட்டை சேர்ந்த ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்தின் நூறு சதவிகித துணை நிறுவனமான ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம் 20,000 கோடி ரூபாய் முதலீட்டில், தொழிற்சாலையை நவீனமயமாக்கல் மற்றும் நவீன வகை கார்கள் (New Models Car) உருவாக்குதல், மின் வாகன மின்கலன் ஒன்று கூட்டப்பட்ட தொகுப்பு (EV Battery Assembly Pack), மின் வாகன மின்னேற்று நிலையங்கள் (EV charging Stations) அமைத்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ள தேவையான வசதிகளை செய்து தருவது குறித்து தமிழ்நாடு அரசின் வழிகாட்டி (Guidance) நிறுவனத்திற்கும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே **புரிந்துணர்வு ஒப்பந்தம்** மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. பன்நோக்கு திட்டங்களை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கவும், மாநில பொருளாதாரத்தை வலுவடைய செய்திடவும், மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள 2030–ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கினை அடைந்திட பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, 2024ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீட்டினை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மேற்கொண்டு வருகிறது.

**<u>ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவன புரிந்துணர்வு ஒப்பந்தம்</u>**

ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம், ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்திற்கு முழுமையாக சொந்தமான துணை நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், இந்தியாவின் முதல் நுண்திறன் நகர்வு ஆற்றல் தீர்வுகள் (smart mobility solutions) வழங்குநராகவும், சீருந்து ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் நிறுவனமாகவும் உள்ளது. அதன் தொடக்கத்திலிருந்தே, 'மனிதகுலத்திற்கான முன்னேற்றம்' என்ற ஹூண்டாயின் உலகளாவிய தொலைநோக்குப் பார்வையுடன், தொழில்துறைக்கு முன்னணி தொழில்நுட்பத்துடன் நகர்வு ஆற்றல் தீர்வுகளை வழங்குவதன் மூலம் வருங்கால சந்ததியினருக்கு நிலையான கண்ணோட்டத்தை உருவாக்குகிறது.

சென்னையை அடுத்த இருங்காட்டுக்கோட்டையில் ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் முதலாவது ஆலை அமைப்பதற்கு 10.12.1996 அன்று முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிறுவனம் தற்போது இந்தியா முழுவதும் 1340 விற்பனை மையங்களையும், 1502 சேவை

மையங்களையும் கொண்ட வலுவான வலையமைப்புடன் செயல்பட்டு வருகிறது. 12 பிரிவுகளில் வலுவான சீருந்து மாடல்களைக் கொண்டுள்ளதுடன் முழுமையான ஒருங்கிணைந்த அதிநவீன உற்பத்தி ஆலை, மேம்பட்ட உற்பத்தி, தரம் மற்றும் சோதனை திறன்களை கொண்டுள்ளது. இந்நிறுவனம், ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு, லத்தீன் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியா பசிபிக் போன்ற 85 வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஹுண்டாய் மோட்டார் நிறுவனத்தின் உலகளாவிய ஏற்றுமதி மையத்தில் முக்கிய பங்களிப்பை அளித்து வருகிறது.

ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் (HMIL) நிறுவனம் 20,000 கோடி ரூபாய் முதலீட்டில், தொழிற்சாலையை நவீனமயமாக்கல் மற்றும் நவீன வகை கார்கள் உருவாக்குதல், மின் வாகன மின்கலன் கூட்டப்பட்ட தொகுப்பு, மின் வாகன மின்னேற்று நிலையங்கள் அமைத்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ள தேவையான வசதிகளை செய்து தருவது குறித்து தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்திற்கும் ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

26 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் ஹுண்டாய் மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம், மேலும் 20,000 கோடி ரூபாய் முதலீடு செய்து தனது தொழில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முன்வந்திருப்பது, உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகள் மற்றும் தொழில் செய்வதற்கு உகந்த சூழலை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளதற்கும், தெற்காசியாவிலேயே முதலீட்டிற்கு மிகவும் உகந்த இடமாக தமிழ்நாடு திகழ்ந்து வருவதற்கும் மேலும் ஒரு சான்றாகும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு.வே. விஷ்ணு, இ.ஆ.ப., ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு. உன்சூ கிம், நிர்வாக இயக்குனர் (கார்ப்பரேட் விவகாரங்கள்) திரு. டி.எஸ்.கிம், துணைத் தலைவர் (நிதி) திரு. டி சரவணன், அசோசியேட் துணைத் தலைவர் திரு.புனீத் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in